# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சுகித சுபசாதக சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1984, ஜூன் மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1984, ஜூன் மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 60

## 1984 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சுகித சுபசாதக சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டம்

[1984, ஜூன் மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 60/82

**சுகித சுபசாதக சங்கமயவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

முன்னுரை.

"சுகித சுபசாதக சங்கமய" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இலங்கையில் கல்பாத என்னுமிடத்தில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டிருக்கின்றதாதலாலும் :

சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சுகித சுபசாதக சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுகித சுபசாதக சங்கமயவைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் சுகித சுபசாதக சங்கமயவில் தற்போது உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் "சுகித சுபசாதக சங்கமய" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறுவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளினதும் வளர்ந்தோரதும், உடலியல் ரீதியாகவும் சமூகவியல் ரீதியாகவும் குறைபாடுடைய பிள்ளைகளினதும் வளர்ந்தோரதும் பாதுகாப்பு, கவனிப்பு, நடத்துமுறை, கல்வி, புனர்வாழ்வு ஆகியவற்றை நலன்புரி நிறுவகங்களைத் தாபித்துப் பேணி வருவதன் மூலம் மேம்படுத்தல் ;

(ஆ) இலம்பாடுற்றவர்களுக்கு உதவியளித்தலும், அவர்களின் நலனுக்கு ஏற்பாடுசெய்தலும் ; அத்துடன்

(இ) மேற்குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை எய்துதற்கு உகந்தனவான அல்லது அவற்றுக்கு இடைநேர்விளைவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

ஏ 66505—2,650 (11/82)

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், அளிப்புக்களையும் நன்கொடைகளையும் பெறவும், அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கம்செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், பதவிதாங்குநர்களையும், அப்போதைக்கு வலுவில் இருப்பனவான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக அத்தகைய விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டு அவற்றுக்கு இணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவி வகிக்கும் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவே கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவாக அமைதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

6. (1) கூட்டுத்தாபனத்தின் எல்லா அசைவற்ற ஆதனத்தினதும் கட்டுக்காப்பு, கூட்டுத்தாபன விதிகளுக்கமைவாக, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டமைந்த நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவிவகிக்கும் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையாகவிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், மீளப் பெறுதல், விலக்குதல் என்பனவற்றுக்காகவும், பதவிதாங்குநர்களையும், நிறைவேற்றுக் குழுவையும், நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையையும் தெரிவு செய்வதற்காகவும், பதவிதாங்குநர்களினதும், நிறைவேற்றுக் குழுவினதும் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் ஆகியோரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், அலுவல்களைக் கையாளுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்காகவும், பொதுவில் வேறுவகையாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்

கப்பட்டதும், அவை, அதே போன்ற கூட்டமொன்றிலும் அதே போன்ற முறையிலும் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தொழுதல் வேண்டும்.

சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவான அல்லது சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான கடன்கள்.

8. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் சங்கத்திற்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புகளும், கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் சங்கத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும், சங்கத்துக்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும், கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

9. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாகவரக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பொறுப்பேற்கவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றல் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைகொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படல் வேண்டும் என்பது.

10. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுள் மூவர் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அத்தகைய உறுப்பினர்கள், அவர்கள் சமூக மளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களதும் உரிமைகளைப் பேணுதல்.

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்கள்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்